## சாலைப் பாதுகாப்பு! உயிர்ப் பாதுகாப்பு!

# கோவை மருத்துவர் இராஜசேகரன் முன்னெடுப்பு பாராட்டுக்குரியது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, அக்.11–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:–

**சாலைப் பாதுகாப்பு! உயிர்ப் பாதுகாப்பு!**

**“உயிர்” அமைப்பின் வழியாக இதனை மக்களிடம் எடுத்துச் சொல்லி விழிப்புணர்வை ஏற்படுத்திடும் கோவை கங்கா மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர் இராஜசேகரன் அவர்களது முன்னெடுப்பு பாராட்டுக்குரியது.**

**சட்டதிட்டங்களை மதித்து சாலைப் பாதுகாப்புக்கும் முக்கியத்துவம் கொடுக்க அனைவரும் உறுதியெடுக்க வேண்டும்! இதற்கான விழிப்புணர்வை நாம் அனைவரும் ஏற்படுத்திட வேண்டும்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## உளுந்தூர்பேட்டை எல்லை கிராமத்தில்

# பாம்பு கடித்து உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக். 11 -**

**கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர் பேட்டை வட்டம், எல்லை கிராமத்தில் விஷப்பாம்பு கடித்து உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

அவரது அறிவிப்பு வருமாறு:?

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர் பேட்டை வட்டம், எல்லை கிராமத்தில் வசிக்கும் திரு.வினாயகமூர்த்தி (வயது 23) த/பெ.ஜெயராமன் என்பவர் கடந்த 04.10.2025 அன்று மேற்படி கிராமத்தில் உள்ள அவரது வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக விஷப்பாம்பு கடித்து உடனடியாக சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் 09.10.2025 அன்று காலை சுமார் 06.00 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

## “திராவிடம் செய்தது என்ன? வாங்க பேசுவோம்...”

# எழும்பூர் தொகுதி இளைஞர்களுக்கான கலந்துரையாடல் கூட்டம்!

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ.- நீட் தேர்வு உள்ளிட்ட கேள்விகளுக்கு விளக்கமளித்தார்!

சென்னை, அக். 11–

கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி திராவிட சித்தாந்தத்தை, அதன் கொள்கைகளை, சாதனைகளை இன்றைய இளைஞர்களிடம் எடுத்துச் செல்லும் விதத்தில், கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் “திராவிடம் செய்தது என்ன? வாங்க பேசுவோம்...” எனும் தலைப்பில் எழும்பூர் தொகுதியில் தொடர் கலந்துரையாடல் கூட்டங்களை நடத்துவதை முன்னெடுத்திருக்கிறார்.

இம்முன்னெடுப்பின் முதல் கலந்துரையாடல் கூட்டம் 05.10.2025 அன்று வார்டு எண்.77, புளியந்தோப்பு, மோதிலால் தெரு ஆசிர்வாதபுரம் தெரு சந்திப்பில் கூட்டம் நடைபெற்றது.

50க்கும் மேற்பட்ட பகுதி இளைஞர்கள் கலந்து கொண்ட இக்கலந்துரையாடல் கூட்டத்தை ஒருங்கிணைத்த சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், “சமுதாயத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? சமுதாயத்திற்கு நாங்கள் என்ன செய்து வருகிறோம்? என்பது குறித்த புரிதலை ஏற்படுத்துவதுதான் கலந்துரையாடலின் நோக்கம்” எனக் குறிப்பிட்டார்.

மேலும், அவ்விளைஞர்களுக்குத் திராவிடம் என்பதனை எளிமையாக விளக்கும் விதமாக, “எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும். உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தார்தான் படிக்க வேண்டும். மற்றவர்கள் படிக்கக் கூடாது என்றிருந்ததை மாற்றி, எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும், கல்வி, வேலைவாய்ப்பில் சமநிலை இருக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்கியதுதான் திராவிடம்.”

“இந்தக் கூட்டத்தில் ஏறத்தாழ சரிபாதியாக பெண்கள் கலந்து கொண்டுள்ளனர். இன்று பெண் பிள்ளைகள் அனைவருக்கும் கல்வி கிடைக்கும் வாய்ப்பு உருவாகியிருக்கிறது. இதற்குக் காரணம் திராவிட இயக்கம்தான். எந்தத் திராவிட இயக்கம் எங்களை உருவாக்கியதோ, எந்த திராவிடத்தால் நாங்கள் மக்கள் பிரதிநிதியாக உங்கள் முன் நிற்கிறோமோ, அந்தச் சித்தாந்தத்தை அடுத்த தலைமுறையைச் சேர்ந்த இளைஞர்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்கான முன்னெடுப்புதான் இந்தக் கலந்துரையாடல்” எனக் குறிப்பிட்டார்.

“கரூருக்கு விஜய் பேசத்தான் வந்தார். ஆனால், அங்கு நடந்த சம்பவத்திற்கு விஜய் மேலேயே எல்லாத்தையும் போட்டுப் பேசுவது தப்புதானே” என ஒரு இளம் பெண் சட்டமன்ற உறுப்பினரிடம் கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விக்குப் பதில் அளித்த அவர், “ஒரு நிகழ்ச்சியை ஒரு அமைப்பு ஏற்பாடு செய்யும்போது, நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கு மட்டு மல்ல, அந்த அமைப்பின் தலைவர்களுக்கும் பொறுப்பு உண்டு. நான் நடந்த சம்பவத்திற்கும் விஜய்க்கும் தொடர்பு இருப்பதாகக் கூறவில்லை. ஆனால், பொறுப்பு இருக்கிறது.

“கூட்டம் கட்டுக்கு அடங்காமல் விஜயைப் பார்க்க வந்ததற்கு அவர் பொறுப்பாக முடியாது. ஆனால், நேர வரையறை என ஒன்று இருக்கிறது. தலைவர் எல்லாரையும் காப்பாற்றியிருக்க முடியாது. ஆனால், தலைவருக்கு அடுத்தபடியாக இருப்பவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன் வந்திருக்க வேண்டும்.

“எங்கே தவறு நடந்திருக்கிறது?” என நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருக்கிறது. சம்பவம் நடந்த பிறகு, விஜய் அங்கிருந்து பாதிக்கப்பட்டவர்களைப் பார்த்திருக்க வேண்டும். தனக்கு அடுத்து இருக்கும் இரண்டாம் கட்டத் தலைவர்களைப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும்படி களத்தில் பணியாற்றச் செய்திருக்க வேண்டும்.

ஆனால், விஜய் என்னாகுமோ, ஏதாகுமோ எனப் பயந்துவிட்டார். நெருக்கடியான தருணங்களில் ஒரு தலைவனுக்குப் பயம் வரக் கூடாது. ஆனால், விஜய்க்குப் பயம் வந்துவிட்டது. ஒரு மருத்துவருக்குப் பயம் வந்தால், நோயாளியை அவரால் காப்பாற்ற முடியுமா?

தலைவன் என்பவன் பயந்து ஓடி விடக் கூடாது. தலைவன் என்பவன் நெருக்கடியாக தருணங்களில் களத்தில் நிற்க வேண்டும்.

விஜய் தலைவராக இருக்கக்கூடிய தகுதியை இழந்துவிட்டதாக நாங்கள் சொல்லவில்லை. நீதிமன்றம் சொல்லுகிறது.

இந்தச் சம்பவம் பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகப் பேசுகிறார்கள். ஆனால், முதலமைச்சர், “கரூர் சம்பவத்தில் இது தப்பா, அது தப்பா எனப் பேசுவதை விட்டுவிடுங்கள். நாமெல்லோரும் ஓர் அணியாக இருந்து, இனி இது போன்ற சம்பவம் எதிர்காலத்தில் இந்தியாவில் வேறெங்கும் நடைபெறாமல் இருக்கப் பாடுபட வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒன்றாக இருந்து உதவ வேண்டும்” எனக் கூறியிருக்கிறார். முதலமைச்சரின் இந்தக் கருத்துதான் திராவிடம். பாதிக்கப்பட்டவனின் தரப்பில் நிற்பதும், உதவுவதும், மீட்பதும்தான் திராவிடம்” எனக் குறிப்பிட்டார்.

“அனைத்துக் கட்சித் தலைவர்களும் நீட்டை ஒழிப்போம் என்கிறார்கள். நீங்கள் ஆட்சிக்கு வந்த பின் நீட்டை ரத்து செய்வோம் என்றீர்கள். ஆனால், நீங்களும் நீட்டை ரத்து செய்யவில்லை. இதனால் இதனை நம்பியிருக்கும் மாணவர்கள் ஏமாற்றமடைகிறார்கள். இதற்கு ஒரு விடிவு கிடைக்குமா? என அஜீத் என்ற இளைஞர் கேள்வி எழுப்பினார்.

அக்கேள்விக்குப் பதில் அளித்த இ.பரந்தாமன், ”+1, +2வில் என்ன மார்க் எடுக்கிறார்களோ, அதைக் கொண்டுதான் கல்லூரி சேர்க்கை நடைபெறவேண்டும் என்பது தி.மு.க.வின் நிலைப்பாடு. 2008 வரை தமிழகத்தில் மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட படிப்புகளுக்குப் பொது நுழைவுத் தேர்வு இருந்தது. நீட் போலத்தான் இதுவும். பெயர்தான் வேறு. அச்சமயத்தில் முதல்வராக இருந்த கலைஞர் இந்தப் பொது நுழைவுத் தேர்வை ரத்து செய்யும் சட்டத்தைக் கொண்டு வந்தார். மாணவர்கள் +1, +2வில் எடுக்கும் மதிப்பெண்களுக்குப் பதிலாக நுழைவுத் தேர்வில் எடுக்கும் மதிப்பெண்களை வைத்து சேர்க்கை நடைபெறுவதால், கிராமப்புற மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று கூறித்தான் பொது நுழைவுத் தேர்வை ரத்து செய்யும் சட்டத்தை கலைஞர் அவர்கள் கொண்டுவந்தார்கள்.

திராவிடத்திற்கு எதிரான கூட்டம் இந்தச் சட்டத்திற்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள். கலைஞர் கொண்டுவந்துள்ள சட்டம் தவறு. திறமையான மருத்துவர்களை உருவாக்குவதற்கு நுழைவுத் தேர்வு அவசியம் என்று வாதாடினார்கள். இந்த வழக்கு உச்சநீதி மன்றம் வரையிலும் சென்றது.

உச்சநீதி மன்றம் கலைஞர் கொண்டு வந்த பொது நுழைவுத் தேர்வை ரத்து செய்யும் 2008ஆம் சட்டத்தை ஆதரித்துத் தீர்ப்பளித்தது. இனி +1, +2 மதிப்பெண்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் சேர்க்கையை நடத்தலாம் என உத்தரவிட்டது. இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களும் கலைஞர் கொண்டு வந்த சட்டத்தைப் பின்பற்ற வேண்டும் என்றும் தனது தீர்ப்பில் உச்சநீதி மன்ற நீதிபதிகள் குறிப்பிட்டிருந்தார்கள்.

காங்கிரசு கூட்டணி ஆட்சியில் தி.மு.க. ஒன்றிய அமைச்சரவையில் இருந்தபோதுதான் நீட் வந்தது என்று குற்றம் சாட்டுகிறார்கள். காங்கிரசு கூட்டணி அரசு நீட் தேர்வைக் கொண்டுவந்தபோது, கலைஞர் அதனை எதிர்த்தார். நீட் தேர்வுக்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் வழக்கு நடந்து அதில் வெற்றியும் பெற்றோம்.

நீட் வேண்டும் எனும் மாநிலங்கள் நீட்டை நடத்திக் கொள்ளலாம். நீட் தேர்வு கட்டாயம் கிடையாது என்ற வாறு காங்கிரசு இந்த நீட் சட்டத்தில் விதிவிலக்கு அளிக்கும் ஒரு பிரிவைக் கொண்டு வந்தது.

பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு இதற்கு எதிராக ஒரு வழக்குத் தொடுத்து, விதி விலக்குப் பிரிவை ரத்து செய்து, அனைத்து மாநிலங்களும் நீட்டை நடத்த வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கினார்கள்.

தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, இந்த நீட் தேர்வை ரத்து செய்யும் சட்டமொன்றைச் சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சி உறுப்பினர்களின் ஆதரவோடு நிறைவேற்றியது. கல்வி என்பது பொதுப்பட்டியலில் இருப்பதாலும், நீட் தேர்வு அனைத்து மாநிலங்களிலும் நடப்பதாலும் தி.மு.க. நிறைவேற்றிய சிறப்புச் சட்டத்திற்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற வேண்டியது அவசியமாகிறது.

ஆனால், ஒன்றிய ஆட்சியை நடத்தி வரும் ஆர்.எஸ்.எஸ்.பா.ஜ.க.வினர் திராவிடத்திற்கு, அதன் சித்தாந்தத்திற்கு எதிரானவர்கள் ஆகையால், நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்குக் கோரும் இந்தச் சிறப்புச் சட்டத்திற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் தராமல் தடுத்து வருகிறார்கள்.

நாம் கொண்டுவந்த சட்டம் குடியரசுத் தலைவரின் மேசையில் இருக்கிறது. மக்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு ஒன்றிய அரசுக்கும் உள்ளது. ஆனால், ஆர்.எஸ்.எஸ்.பா.ஜ.க.வினரோ அரசியல் காழ்ப்புணர்வோடு நடந்து கொள்கிறார்கள். தமிழ்நாடு கல்வியில் முன்னேறிய மாநிலமாக இருப்பதால், அதனைச் சிறுமைப்படுத்தும் நோக்கத்தோடு நடந்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, தென் மாநிலங்களிலும் பா.ஜ.க.வால் பெரும்பான்மை வெற்றியை பெற முடியாவிட்டாலும், வட இந்தியாவில் கிடைக்கும் வெற்றியைக் கொண்டு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்று ஆட்சியில் இருக்கிறார்கள். இதனைப் பயன்படுத்திக் கொண்டு தமிழ்நாடு அரசு கொண்டு வந்திருக்கும் நீட் தேர்வு ரத்து சிறப்புச் சட்டத்திற்கு ஒப்புதல் தர மறுக்கிறார்கள்.

இதுதான் பிரச்சினையே தவிர, தி.மு.க. அரசு நீட் தேர்வுக்கு எதிராக எதுவும் செய்யவில்லை என்பதெல்லாம் அல்ல.

திராவிடம் குறித்த அடிப்படையான புரிதலை ஏற்படுத்தும் விதத்தில் இக்கலந்துரையாடல் கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட இளைஞர்கள் அனைவருக்கும் மூன்று நூல்கள் அடங்கிய தொகுப்பைச் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் பரிசாக அளித்தார்.



பொள்ளாச்சி வடக்கு கிழக்கு ஒன்றிய கிளை மற்றும் பாக இளைஞரணி நிர்வாகிகள் ஆய்வுக்கூட்டம் கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் பொள்ளாச்சி வடக்கு கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் வே.மருதவேல் ஏற்பாட்டில் கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர் தென்றல் மணிமாறன் மேற்பார்வையில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பார்த்தசாரதி வரவேற்புரையில் தேனி வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆஜிப்கான் கலந்து கொண்டு கருத்துக்கள் வழங்கி ஆய்வு மேற்கொண்டார். இதில் இளைஞர் அணி நிர்வாகிகள், கழகக் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு தொழில் நுட்ப மையம் –

# மெல்போர்ன் பல்கலைக்கழகம் இடையே நோக்குக் கடிதம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை,அக்.12-

சென்னை, அக்டோபர் 9, 2025: இந்தியாவின் முதல் வலையமைப்பான தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT Hub), ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் பல்கலைக்கழகம் உடன் இன்று நோக்குக் கடிதத்தில் (LoI) கையெழுத்திட்டது. இந்நிகழ்வு, தமிழ்நாட்டின் புத்தாக்க சூழலையும் மெல்போர்ன் பல்கலைக்கழகத்தின் புதுமை அமைப்பையும் இணைக்கும் நோக்கத்துடன் நடைபெற்றது.

இந்த நோக்குக் கடிதம் ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள், ஸ்டார்ட்அப்புகள், புதுமையாளர்கள், தொழில் துறை நிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர்கள் ஆகியோருக்கிடையில் நீண்டகால ஒத்துழைப்பை உருவாக்கும் வகையில் இரு நாடுகளின் புத்தாக்க சூழலை வலுப்படுத்துகிறது.

இந்நிகழ்வில், மெல்போர்ன் பல்கலைக்கழகத்தின் உப துணைவேந்தர் (உலகளாவிய கலாச்சாரம் மற்றும் ஈடுபாடு) பேராசிரியர் மைக்கேல் வெஸ்லி, மற்றும் தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தின் (iTNT Hub) தலைமை செயல் அலுவலர் திருமதி. வனிதா வேணுகோபால் ஆகியோர் நோக்குக் கடிதத்தை பரிமாறிக்கொண்டனர்.

நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் டாக்டர். பழனிவேல் தியாகராஜன், ஆஸ்திரேலியாவின் தலைமைத் தூதர் திருமதி சிலை ஜாகி, மற்றும் தகவல் தொழில் நுட்ப மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மை செயலர் திரு. ப்ரஜேந்திர நவ்நித், ஐ.ஏ.எஸ். ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT Hub), செயற்கை நுண்ணறிவு (AI/ML), விரிவான மற்றும் மெய்நிகர் உண்மை (AR/VR), பொருள்களின் இணையம் (IoT), ரோபோட்டிக்ஸ், செமிகண்டக்டர் மற்றும் குவாண்டம் கணினி ஆகிய முன்நிலை தொழில்நுட்பங்களை முன்னெடுத்து, ஸ்டார்ட்அப்புகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு புத்தாக்க மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கும் தளமாக செயல்படுகிறது.

திருமதி வனிதா வேணுகோபால் கூறியதாவது: “தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT) - மெல்போர்ன் பல்கலைக்கழக இணைப்பு இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவுக்கிடையில் ஸ்டார்ட்அப்புகள், கல்வியாளர்கள் மற்றும் தொ ழில்துறைகளை இணைக்கும் வலுவான புத்தாக்க சூழலை உருவாக்கும். இரு நிறுவனங்களும் இணைந்து கூட்டு வளர்ச்சி முடக்கத் திட்டம் (Acceleration) திட்டங்களை வடிவமைத்து, ஸ்டார்ட்அப்புகள் மற்றும் வழிகாட்டிகளுக்கிடையேயான பரிமாற்றங்களை ஊக்குவித்து, தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் தொழில்முனைவு வளர்ச்சியை ஊக்குவிக்க உள்ளன. முதலீட்டாளர் இணைப்புகள் மற்றும் இணை கல்வி வலையமைப்புகளும் இதன் மூலம் மேம்படுத்தப்படும்.,” என தெரிவித்தார்.

மெல்போன் பல்கலைக்கழகத்தின் உப துணை வேந்தர் பேராசிரியர் மைக்கேல் வெஸ்லி கூறியதாவது:

“மெல்போர்ன் பல்கலைக்கழகமும் தமிழ்நாடு தொழில்நுட்ப மையமும் (iTNT Hub) இணைந்து இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா சந்திக்கும் சமூக, சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார சவால்களுக்கு தீர்வுகளை உருவாக்கும் திறனைக் கொண்டுள்ளன. இரு அமைப்புகளுக்கிடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு, புத்தாக்க மற்றும் இணை உருவாக்கத்திற்கு வாய்ப்புகளை உருவாக்கும்,” என்றார்.

அவர் மேலும் கூறியதாவது: “நாம் ஒன்றிணைந்து செயல்பட்டால், புதிய தொழில்நுட்பங்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஸ்டார்ட்அப்புகளுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்தவும், புதிய அணுகுமுறைகளை உருவாக்கவும் முடியும். மெல்போர்ன் பல்கலைக்கழகத்தின் புத்தாக்க அமைப்பு உலகளவில் விரிவடைந்து, மேலும் பல கூட்டாண்மைகளை உருவாக்கும் என்பது எங்களின் நோக்கம்,” என உப துணைவேந்தர் குறிப்பிட்டார்.

## இரா.துரைராஜ் – எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் 168 – 172 வார்டுகளில்

# ரூ.5.93 கோடி மதிப்பில் - 5 இழுவிசை கூரையிலான பேருந்து நிழற்குடைகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பணிகளை தொடங்கி வைத்தார்!

*சென்னை, அக். 11 -*

*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா சுப்பிரமணியன் சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, அடையாறு மண்டலத்திற்குட்பட்ட ஈக்காட்டுத்தாங்கல், கிண்டி ரேஸ் கோர்ஸ் சாலை மற்றும் கிண்டி தொழிற்பேட்டை வளாகத்தில் சிட்கோ அலுவலக சாலை ஆகிய பகுதிகளில் ரூபாய் 5.93 கோடி மதிப்பீட்டில் புதிய இழுவிசை கூரையிலான 5 பேருந்து நிழற்குடைகள் அமைக்கும் பணிகளை நேற்று முன்தினம் (9.10.2025) அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.*

*நேற்று முன்தினம் (9.10.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அடையாறு மண்டலம், வார்டு 168 ல், ஈக்காட்டுத்தாங்கல் 100 அடி சாலையில் இரண்டு பேருந்து நிறுத்தங்கள்,*

*கிண்டி ரேஸ் கோர்ஸ் சாலையில் ஒரு பேருந்து நிறுத்தம், வார்டு 172ல், கிண்டி தொழிற்பேட்டை வளாகத்தில் உள்ள சிட்கோ அலுவலக சாலையில் 2 பேருந்து நிறுத்தங்கள் என இந்த இடங்களில் ஏற்கனவே உள்ள பேருந்து நிழற்குடைகளை அகற்றிவிட்டு, அந்த இடங்களில் ரூபாய் 5.93 கோடி மதிப்பீட்டில் இழுவிசை கூரையிலான 5 புதிய பேருந்து நிழற்குடைகள் அமைக்கும் பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து, அமைக்கப்படவுள்ள புதிய பேருந்து நிறுத்தங்களின் வரைபடங்களைப் பார்வையிட்டு அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.*

*இந்நிகழ்வில் துணை மேயர். மு.மகேஷ்குமார், மண்டலக் குழுத் தலைவர்கள் ஆர். துரைராஜ் (அடையாறு), எம்.கிருஷ்ணமூர்த்தி (கோடம்பாக்கம்), மாமன்ற உறுப்பினர் மோகன்குமார் மாநகராட்சியின் அதிகாரிகள், பகுதி அவைத்தலைவர் இ. முருகேசன், பகுதி பொருளாளர், அருணகிரி, வட்ட கழக செயலாளர்கள், இராதாகிருஷ்ணன், நேருநகர் எஸ்.பாட்சா, வே. முருகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

